நிறுவனமாகவும் உள்ளது. ஆனால் வணிக வங்கிகள் பொதுமக்களின் வங்கியாகவும், பொது மக்களுக்கு அறிவுரை கூறுபவையாகவும் உள்ளன.

6) மைய வங்கி எல்லா நாடுகளிலும் நாட்டுடமையாக்கப்பட்டுள்ளது. ஆனால் வணிக வங்கிகள் ஒரு சில நாடுகளில் மட்டும் நாட்டுடமை ஆக்கப்பட்டுள்ளன. ஏனைய நாடுகளில் இவை தனியாரின் கையிலேயே உள்ளன.

## 2. மைய வங்கியின் பணிகள்
## (Functions of a Central Banks)

மைய வங்கியே ஒரு நாட்டின் தலையாய வங்கியாகும். இது ஒரு நாட்டின் பணத்தில் வர்த்தகம் செய்கின்ற நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகள் யாவற்றையும் ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துகிறது. இதன்மூலம் பண அங்காடியின் தலைவனாக மைய வங்கி திகழ்கிறது. டீகாக் மைய வங்கி கீழ்க்கண்ட பணிகளை ஆற்றுவதாகக் குறிப்பிடுகிறார் :

### 1. காகிதப் பண வெளியீட்டில் முற்றுரிமை :

தற்காலத்தில் காகிதப் பணமே புழக்கத்திலுள்ள மொத்தச் சட்டச் செலாவணியில் பெரும் பங்கு வகிக்கின்றது. இக்காகிதப் பணத்தை வெளியிடுகின்ற அதிகாரம் மைய வங்கி ஒன்றுக்கே வழங்கப்பட்டுள்ளது. 18–ம் நூற்றாண்டிலும் 19–ம் நூற்றாண்டிலும் வாணிப வங்கிகளும் இவ்வுரிமை பெற்றிருந்தன. ஆனால் இது விரும்பத்தக்கதல்ல என்று கருதப்பட்டது. எனவே காகிதப் பண வெளியீடானது மைய வங்கியின் ஏகபோக உரிமையாக்கப்பட்டது. இத்தகைய முற்றுரிமைக்கு சில சிறப்புக்கள் உண்டு : அ) காகிதப் பண வெளியீட்டில் ஒருவித முற்றுரிமை ஏற்படுகிறது. ஆ) மைய வங்கி வெளியிடுவதனால் பணத்திற்கு மதிப்பு ஏற்படுகிறது. இ) வணிக வங்கிகள் தேவையில்லாது கடனளிப்பதை இது கட்டுப்பாடு செய்கிறது.

### 2. அரசின் வங்கி :

அரசின் வரவு செலவு கணக்குகள் யாவற்றையும் மைய வங்கியே நிர்வகித்து வருகிறது. பொது மக்களுக்கு வணிக வங்கிகள் ஆற்றி வருகின்ற வங்கிப் பணிகளை, மைய வங்கியானது,

அரசாங்கத்திற்கு ஆற்றி வருகிறது. அரசாங்கத்திற்காக பிறருக்கு மைய வங்கி பணம் வழங்குகிறது. அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய பணத்தை மைய வங்கி வசூலிக்கிறது. அரசாங்கக் கடன் பத்திரங்களை விற்பனை செய்வதும் மைய வங்கியே. அரசாங்கக் கடனை நிர்வகிப்பதும் மைய வங்கியே. அரசாங்கத்திற்குத் தேவைப்படும் குறுகிய காலப் பணத்தேவையை நிறைவேற்றுவதற்கு மைய வங்கி அரசாங்கத்திற்கு வழிவகைக் கடன்கள் (Ways and means advances) வழங்கி வருகிறது. அவ்வப்போது பண விஷயங்கள், பொருளாதார விஷயங்கள் குறித்து அரசாங்கத்திற்கு மைய வங்கி ஆலோசனை வழங்கி வருகின்றது.

### 3. வணிக வங்கிகளின் பண இருப்புக்குப் பாதுகாவலன் :

எல்லா வணிக வங்கிகளும் தங்களிடமுள்ள ரொக்க இருப்பின் ஒரு பகுதியை மைய வங்கியில் வைப்பாக வைத்திருக்க வேண்டும். இந்த வைப்பின் அடிப்படையில் தான் மைய வங்கி நிதியை ஒரு வங்கியிலிருந்து இன்னொரு வங்கிக்கு மாற்றி உதவுகிறது. இவ்வாறு வணிக வங்கிகள் மைய வங்கியில் ரொக்க இருப்பு வைத்திருப்பதனால் பல நன்மைகள் விளைவதாக டீகாக் குறிப்பிட்டுள்ளார். அவையாவன:

அ) மைய வங்கியில் ரொக்க இருப்பு வைத்திருப்பது ஒரு நாட்டின் வங்கி முறைக்கு பெரும் பலமளிக்கிறது. ஆ) மையப் படுத்தப்பட்ட ரொக்க இருப்பு முறை நெகிழ்ச்சியுடைய கடன் அமைப்புக்கு அடிகோலுகிறது. இ) நிதி நெருக்கடியின்போது மையப் படுத்தப்பட்ட ரொக்க இருப்பு சிறப்பாகச் செயல்படுகிறது.

### 4. அயல்நாட்டுச் செலாவணியின் பாதுகாவலன் :

நாணயமாற்று வீதமானது ஏற்ற இறக்கங்கட்கு உட்படாது நிலைத்த மதிப்புடையதாக இருக்குமாறு போற்றிக் காக்க வேண்டியது மைய வங்கியின் பணியேயாகும். நாணயமாற்றுக் கட்டுப்பாடுகளை விதித்து அவற்றை நிர்வகித்து வருவதும் மைய வங்கியேயாகும். ஒரு நாட்டு அரசாங்கத்திடமுள்ள தங்கம், நாட்டு மக்கள் ஏற்றுமதி மூலம் ஈட்டுகின்ற அயல்நாட்டுச் செலாவணி ஆகியவற்றிற்கு உறைவிடமாகவும், அவற்றிற்குப் பாதுகாவலனாகவும் மைய வங்கி விளங்குகிறது.



LLEGE FORWARD 43908

### 5. கடைநிலைக் கடன் ஈவோன் :

வணிக வங்கிகட்கு அவ்வப்போது பணத்தேவை எழும்போது அவை மைய வங்கியை அணுகி கடன் பெற்றுக்கொள்ள முடியும். பொதுவாக சாதாரணக் காலங்களில் வணிக வங்கிகள் தம் பணத்தேவையை நிறைவேற்றுவதற்கு பண அங்காடியிலேயே தம்மிடமுள்ள நீர்மைத் தன்மையுள்ள சொத்துக்களை விற்று பணத்தைப் புரட்டிக் கொள்ளும். ஆனால் நெருக்கடிக் காலங்களில் பண அங்காடியிலேயே வேறு நிறுவனங்களிடம் சொத்துக்களை விற்க இயலாத நிலையில் வணிக வங்கிகட்கு புகலிடம் அளிக்கக்கூடியது மைய வங்கி ஒன்று தான். எனவே மைய வங்கி கடைநிலைக் கடன் ஈவோன் என்ற பெயர் பெற்றுள்ளது. தன்னை அணுகும் வணிக வங்கிகளின் சொத்துக்களை மைய வங்கி மறுகழிவு செய்வதன் மூலம் அவற்றிற்கு தேவையான பணம் அளித்து வருகிறது. மைய வங்கியானது வங்கி வீதத்திலோ அல்லது அதைவிட அதிகமான வீதத்திலோ மறுகழிவு செய்கின்றது.

### 6. செக்குத் தீர்வகம் (Clearing house) :

மைய வங்கிகளில் வணிக வங்கிகள் யாவும் ரொக்க இருப்பு வைத்திருக்கின்றன. எனவே, ஒரு வங்கி பிறிதொரு வங்கிக்குக் கொடுக்க வேண்டிய கடன்களை எளிதில் தீர்த்துக்கொள்ள முடிகின்றது. சுருங்கக்கூறின் வணிக வங்கிகட்கு மைய வங்கியானது ஒரு மையச் செக்குத் தீர்வகமாக விளங்குகிறது. ரொக்கம் கைமாறாமலேயே வணிக வங்கிகள் தம் கடன் பேரங்களை மைய வங்கியில் தீர்த்துக்கொள்ள முடிகிறது.

### 7. கடனைக் கட்டுப்படுத்தும் நிறுவனம் :

வணிக வங்கிகள் கடனையும் வைப்புக்களையும் பெருக்கும் ஆற்றல் பெற்றுத் திகழ்பவை. இவற்றின் IOUக்கள் பணமாக மதிக்கப்படுகின்றன. பணத்தில் வர்த்தகம் செய்யும் நிறுவனங்களாக மட்டுமின்றி பணத்தை உற்பத்தி செய்யும் ஆற்றல் பெற்றவை வணிக வங்கிகள் என்று சேயர்ஸ் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். வங்கிக் கடன்களின் உதவியுடன் தான் நாட்டில் பொருளாதார நடவடிக்கையின் பெரும் பகுதி நிகழ்ந்து வருகிறது. வங்கிக் கடன்களின் அளவு பெருகும்போது நாட்டுப் பொருளாதார நடவடிக்கை பெருகி

பணப்புழக்கம் அதிகரித்து விலைவாசிகள் ஏறுமுகமாக அமையக்கூடும். வங்கிக் கடன்களின் அளவு குறையும்போது பொருளாதார நடவடிக்கை குறைகிறது. அப்பொழுது புழக்கத்திலுள்ள பணத்தின் அளவு குறைந்து, விலைவாசிகள் இறங்குமுகமாக அமையக்கூடும். மேலும் வங்கிக் கடன்கள் கட்டுப்பாடின்றி வழங்கப் பெற்றால் ஊக வாணிபம் தழைக்கிறது; வணிகர்கள் பொருட்களைப் பதுக்கி வைக்கின்றனர். இதனால் இவற்றின் விலைகள் ஏறுமுகமாக அமையலாம். இவை யாவும் விரும்பத்தகாதவை. மக்களுக்கும், பொருளாதார அமைப்பிற்கும் பெருத்த கேடுகளை விளைவிக்கக் கூடியவை. எனவே வங்கிகள் வழங்கி வருகின்ற கடன்களைக் கட்டுப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். இப்பணியை மைய வங்கி ஆற்றி வருகிறது. இப்பணியை மைய வங்கி செவ்வனே ஆற்றுவதற்கு ஏதுவாக மைய வங்கிக்கு பல கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளும் அதிகாரங்களும் உள்ளன. மொத்தக் கடன் அளவைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு மைய வங்கி கையாண்டு வருகின்ற கருவிகள் கடன் அளவுக் கட்டுப்பாட்டுக் கருவிகள் (Quantitative or General Methods) என்ற பெயர் பெற்றுள்ளன. வட்டிவீத மாற்றம், வெளி அங்காடி நடவடிக்கைகள், மாற்றக்கூடிய ரொக்கக் காப்பு விகிதம் ஆகியவை இதில் அடங்கும். குறிப்பிட்ட தொழில்கட்கோ, பயன்பாட்டிற்கோ வழங்கப் பெறுகின்ற கடன்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு மைய வங்கி கையாண்டு வருகின்ற கருவிகள் கடன் தன்மைக் கட்டுப்பாட்டுக் கருவிகள் (Selective or Qualitative Methods) என்று அழைக்கப்பெறுகின்றன. நேரடி நடவடிக்கை, வரம்புத் தேவை, கடன் பங்கீடு, நுகர்வோர் கடன் கட்டுப்பாடு ஆகிய கருவிகள் இவற்றுள் சிலவாகும். இக்கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளைக் கையாளுவதன் மூலம் மைய வங்கியானது நாட்டில் வணிகச்சுழலின் வேகத்தை மட்டுப்படுத்துகிறது. இதனால் விலைவாசிகள் ஏற்ற இறக்கங்கட்கு உட்படாது கண்காணித்து வர முடிகின்றது.

**8. பண அங்காடியின் தலைவன் :**

பண அங்காடியிலுள்ள நிறுவனங்கள் யாவும் குறுங்காலச் சொத்துக்களை வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபட்டுள்ளன. இவை பலதரப்பட்டவையாக உள்ளன. இவற்றின் நடவடிக்கைகளை



ஒழுங்குபடுத்தி, கட்டுப்படுத்தி, பண அங்காடியின் காவலனாகவும் தலைவனாகவும் மைய வங்கி விளங்குகிறது.

**9. பிற பணிகள் :**

அண்மைக் காலங்களில் மைய வங்கி மக்களிடையே வங்கிப் பழக்கத்தை ஊக்குவித்து வருகிறது. மைய வங்கி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. அறிக்கைகள், பத்திரிக்கைகள் வெளியிட்டு வருகின்றது. மைய வங்கி வங்கியாளர்க்குப் பயிற்சி அளிக்கிறது.

இவ்வாறு மைய வங்கியானது பல அரும்பெரும் பணிகளை ஆற்றி வருகின்றது. பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

## 3. மைய வங்கி பிரயோகிக்கின்ற கடன் கட்டுப்பாட்டு முறைகள் (Methods of credit control)

**முன்னுரை : கடன் கட்டுப்பாட்டின் குறிக்கோள்கள் :**

மைய வங்கி ஆற்றி வருகின்ற பல்வேறு பணிகளிலும் கடனைக் கட்டுப்படுத்தும் பணியே மிகவும் இன்றியமையாதது என்று டிகாக் கூறியுள்ளார். தற்காலத்தில் பொருளாதார வளர்ச்சியில் முன்னணியில் உள்ள நாடுகளில் புழக்கத்திலுள்ள மொத்தப் பணத்தில் வங்கிப் பணமே பெரும் பங்கு வகிக்கின்றது. மேலும் தற்காலத்தில் நடைபெறுகின்ற பேரங்களில் பெரும்பகுதி கடன் பேரங்களாகவே உள்ளன. இந்நிலையில் கடன்களின் அளவையும், வங்கிப் பணத்தின் அளவையும் கட்டுப்படுத்தி ஒழுங்கு செய்ய வேண்டியது இன்றியமையாததாக உள்ளது.

**கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள் :**

மைய வங்கி கடன் கட்டுப்பாட்டுப் பணியை ஆற்றுவதற்கு ஏற்ற வகையில் பல கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளைப் பெற்றுள்ளது. இவை இரு வகைப்படும். 1) கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள் (General or Quantitative Methods) 2) கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் (Selective or Qualitative Methods).